## පාර්ලිමේන්තුවේ විපක්ෂ නායක කාර්යාලය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක 183 වාර්තාව සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) ප්‍රකාරව ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලැබූ පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

## பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 183 அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் கௌரவ அமைச்சர் அவர்களின் அவதானிப்புகள் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

## Office of the Leader of the Opposition of Parliament

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports of Parliamentary Series No. 183 tabled by the Committee on Public Accounts in terms of the Standing Order No. 119 (4).

படிவ இலக்கம் 01

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல : 183

நிறுவனத்தின் பெயர் : பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

| இல | 2020 நிதியாண்டுக்கான குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | அடையாளம் காணப்பட்ட / தற்போதைய நிலையின் குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 01. | வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை | தற்போது, வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| 02. | மாதாந்த நிதித் தேவைகளைக் குறிக்கும் நிதிப் பாய்ச்சல் திட்டங்கள் ஆண்டின் தொடக்கத்தில் திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்போது, நிதிப் பாய்ச்சல் திட்டங்கள் முறையாக தயாரிக்கப்பட்டு திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 03. | 2016 -03-31 திகதியிட்ட 05/2016 இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின்படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்பொழுது இந்த அறிக்கைகளை இற்றைவரைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 04. | 2016-12-29 திகதியிட்ட 2016/30 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக வருடாந்த செலவு அலகுக்குரிய வாகனங்களில் எரிபொருள் தொடர்பான சோதனைகளை மேற்கொள்ளவில்லை. | பல வாகனங்களின் சோதனைகள் நிறைவடைந்துள்ள நிலையில், QR குறியீட்டு முறைமைகள் மற்றும் எரிபொருள் பிரச்சினை முடிந்த பிறகு, மற்ற வாகனங்களுக்கும் இது தொடர்பான சோதனை நடத்தப்படும். |
| 05. | 2002-09-12 திகதியிட்ட 402 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி, நிதியாண்டு முடிந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்துக்கு பிரதியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்பொழுது இந்த அறிக்கைகளை இற்றைவரைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 06. | நிறுவனங்களைப் பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு வழங்க ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையதளம் பொதுமக்கள் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்ய அனுமதிக்கவில்லை. | தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை 3/2022 மூலம் மூலதனச் செலவு மட்டுப்படுத்தப்படல் |
| 07. | 2018 ஜனவரி 24, திகதியிட்ட 02/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாட்டின் படி, முறையாக தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | தற்போது, மனித வளத் திட்டம் ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 08. | தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டமானது ஒரு வருடத்திற்கு ஒரு ஊழியருக்கு குறைந்தபட்சம் 12 மணிநேர மேலதிகப் பயிற்சியை வழங்கவில்லை. | தற்போது, பயிற்சித் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து, பயிற்சி செலவினம் மற்றும் வழங்கப்படும் நிதியின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பயிற்சி திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. |
| 09. | மொத்த பணியாட் தொகுதியையும் உள்ளடக்கிய செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை செய்யப்படவில்லை | அலுவலகத்தின் பணிகள் மறுசீரமைக்கப்படுவதால், புதிய பணிகள் ஒதுக்கப்பட்ட பிறகு செயலாற்றுகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படும். |
| 10. | திட்டமிட்ட பயிற்சி வாய்ப்புகளில் இருந்து வழங்கிய பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50%க்கும் குறைவாகவே இருந்தது. | தற்போது, பயிற்சித் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து, பயிற்சி செலவினம் மற்றும் வழங்கப்படும் நிதியின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பயிற்சி திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. |

ஒப்பம் / சஜித் பிரேமதாச, பா.உ.
எதிர்க்கட்சித் தலைவர்
இலங்கைப் பாராளுமன்றம்

2023-04- 26